தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை–6.

ந.க.எண். 34466/அ4/இ1 /2020 நாள். 09./11/2020

பொருள்: அலுவலக நிர்வாகம் – கல்வித் துறை அலுவலகங்களில் அலுவலக பணிகள் மேற்கொள்ளுதல் – அலுவலக பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் – குறித்து .

------

பள்ளிக் கல்வித் துறையில் ஜீன் 18 முதல் பல்வேறு நிர்வாக மாற்றங்கள் சீரமைக்கப்பட்டு அதிகாரங்கள் பரவாலாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் கல்வித் துறை அலுவலகங்களில் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் அலுவலக பணியாளர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படவேண்டியுள்ளது. எனவே அலுவலகப் பணியாளர்கள் கோப்புகளை கையாளுவதிலும், முக்கியத்துவம் அளிப்பதிலும், நீதிமன்ற கோப்புகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதலும், பதிவேடுகள் பராமரிப்பு போன்றவற்றில் உரிய பயிற்சிகள் அளிக்க தேவை ஏற்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெளிவு செய்யப்பட்ட புதியதாக 640 இளநிலை உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் அவர்களுக்கும் தேவையான அலுவலகநிர்வாக பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

இதனால் வருவாய் மாவட்டத்திலுள்ள முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர்கள் / மாவட்டக் கல்வி அலுவலகப் பணியாளர்கள் அடங்கிய 2 நாள் அலுவலகம் சார்பான பயிற்சியும், வட்டாரக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அரசு உயர்நிலை / மேல்நிலை பள்ளி பணியாளர்கள் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலக பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2 நாள் அலுவலகம் சார்பான பயிற்சியும் அளிக்கப்படவேண்டியுள்ளது.

எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கால அட்டவணை அடிப்படையில் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் அலுவலகப் பணியாளர்களுக்கு உரிய பயிற்சியினை நிதிக் காப்பாளர்கள் / ஓய்வு பெற்ற நேர்முக உதவியாளர்கள் / தற்போது பணிபுரியும் நேர்முக உதவியாளர்கள் ஆகியோரை கொண்டு மேற்கண்ட பயிற்சியினை திறம்பட நடத்த தெரிவிக்கப்படுகிறார்கள்.

இணைப்பு: கால அட்டவணை

09/11/2020

பள்ளிக் கல்வி இயக்குநர்
சென்னை–6.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

முதல் நாள்

# பள்ளிக் கல்வி இயக்ககம்

## அமைச்சுப் பணியாளர்களுக்கான நிர்வாகப் பயிற்சி

காலஅட்டவணை

நாள்:

| நேரம் | பொருள் | கருத்தாளர் பெயர் |
|---|---|---|
| 09.30 am - 11.15 am | வட்டாரக் கல்வி அலுவலக அமைப்பும், அலுவலக நடைமுறைகளும், அலுவலகத் தலைவர்களின் பொறுப்புகளும், கடமைகளும், பள்ளிப் பார்வை, ஆண்டாய்வு. | |
| 11.15am - 11.30am | தேநீர் இடைவேளை | |
| 11.30am - 01.00pm | நிதியுதவி பெறும் பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள், புதிய பள்ளிகள் தொடங்குதல் மற்றும் தரம் உயர்த்துதல், ஓய்வூதியம், அங்கீகாரம். மேல்நிலைக் கல்வி - பாடத் தொகுப்பு துவங்குதல். மெட்ரிக் பள்ளிகள் விதிமுறைகள். | |
| 1.00pm - 2.00pm | உணவு இடைவேளை | |
| 2.00pm - 3.00pm | முன்னுரிமைப் பட்டியல், தேர்ந்தோர் பெயர் பட்டியல், ஆசிரியர் நியமனம், பதவி உயர்வு, பதவி உயர்வு உரிமைவிடல், பணிப்பதிவேடு, மேல் / உயர்நிலை / ஊராட்சி ஒன்றிய பள்ளிகள். | |
| 3.00pm–3.15pm | தேநீர் இடைவேளை | |
| 3.15pm - 4.15pm | பணப்பலன்கள், கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று, அலுவலகத்தில் பராமரிக்கப்படவேண்டிய பதிவேடுகள், தன்பதிவேடுகள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகள், | |
| 4.15pm - 5.15pm | நீதிமன்ற வழக்குகள் | |

# பள்ளிக் கல்வி இயக்ககம்

## அமைச்சுப் பணியாளர்களுக்கான நிர்வாகப் பயிற்சி

### கால அட்டவணை

நாள்:

| நேரம் | பொருள் | கருத்தாளர் பெயர் |
|---|---|---|
| 09.30 am - 11.15 am | ஊக்க ஊதிய உயர்வு, ஊதிய நிர்ணயம் தேர்வு நிலை, சிறப்பு நிலை, உயர்கல்வி பயில முன் அனுமதி - அரசு / நிதியுதவி. | |
| 11.15am - 11.30am | தேநீர் இடைவேளை | |
| 11.30.am–01.00pm | நடத்தை விதிகள், ஒழுங்கு நடவடிக்கை விதிகள் | |
| 1.00pm - 2.00pm | உணவு இடைவேளை | |
| 2.00pm - 3.00pm | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2009 கருணை அடிப்படை நியமனம். | |
| 3.00pm–3.15pm | தேநீர் இடைவேளை | |
| 3.15pm - 4.15pm | கடிதங்கள், கோப்புகள், விடுப்பு விதிகள், தகவல் அறியும் உரிமைச் சட்டம், முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், பணிவரன்முறை, தகுதிகாண்பருவம். | |
| 4.15pm - 5.15pm | உண்டியல் தயாரித்தல், எண் பட்டியல், ஒத்திசைவுப்பணி, தணிக்கை, புதிய மருத்துவ காப்பீட்டுத்திட்டம். ஆண்டாய்வு மேற்கொள்ளல், IFHRMS | |